பாரதிதாசன் பல்கலைக்கழகம்,

திருச்சிராப்பள்ளி - 620 024

**டிசம்பர் 2020 ஆய்வியல் நிறைஞர் தேர்வுகளுக்கான மாணாக்கர்கள் பல்கலைக்கழக அனுமதிபெற்று உரிய தேர்வு கட்டணம் செலுத்தி தேர்வுகளை எழுத பதிவு செய்துள்ள மாணாக்கர்களுக்கு மட்டுமான தேர்வு எழுதுவதற்கான வழிகாட்டு முறைகள்.**

- ஆய்வியல் நிறைஞர் எழுத்துத் தேர்வுகள் 16.12.2020 தொடங்கி 19-12-2020 முடிய நடத்தப்பெறும்.
- நடப்பு பயன்பாட்டில் உள்ள வகையின்படி வினாத்தாள் மூலம் தேர்வுகள் நடத்தப்பெறும்.
- வினாத்தாளில் குறிப்பிட்டுள்ள அறிவுரைகளின் படி தேர்வுக்காலம் மூன்று மணி நேரம் ஆகும்.
- நாள்தோறும் தேர்வு முற்பகல் 10.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை நடத்தப்பெறும்.
- வினாத்தாள்கள் மூலம் தேர்வுகள் நடத்தப்படும். வினாத்தாள்கள் தேர்வு தொடங்குவதற்கு 1 மணிநேரம் முன்பாக முற்பகல் 9.00 மணிக்கு கல்லூரி முதல்வர்களின் **E-Mail** முகவரிக்கு அனுப்பப்படும். மேலும் முற்பகல் 10.00 மணிக்கு பல்கலைக்கழக வலைதளத்தின் வழியாக அனுப்பப்படும்.
- வினாத்தாள் பதிவிறக்கத்திற்கு பின் மாணாக்கர்கள் சொந்த பயன்பாட்டின் அடிப்படையில் **A4** அளவிலான கோடு போடாத வெள்ளைத் தாள்கள் பயன்படுத்தி தேர்வினை எழுதவேண்டும்.
- விடைத்தாள்களை நீலம் அல்லது கருப்பு நிற மசியால் மாணாக்கர்கள் எழுத வேண்டும். விடைகளை தட்டச்சு செய்து அனுப்புவதோ, கணினியில் அச்சிட்டு அனுப்புவது, புத்தகங்களில் இருந்து எடுத்து, **Google image** பயன்படுத்துவது, ஒட்டி அனுப்புவது போன்ற செயல்களுக்கு அனுமதியில்லை.
- மாணாக்கர் பதிவெண், மையஎண்/கல்லூரிஎண், எழுத்துத்தாளின் பெயர், பாடக்குறியீடு மற்றும் தேர்வு நாள் ஆகியவற்றை தங்கள் விடைத்தாளின் ஒவ்வொரு பக்கத்தின் மேற்பகுதியில் எழுதி விடைத்தாளின் ஒவ்வொரு பக்கத்தின் கீழ்ப் பகுதியில் கையொப்பம் இட வேண்டும்.
- விடைத்தாளின் முகப்பு பக்கத்தில் எழுதப்பட்ட மொத்த தாள்களின் பக்க எண்ணிக்கையினை கட்டாயம் குறிப்பிடல் வேண்டும். பக்கம் எண்ணிக்கை குறிப்பிடப்படாத விடைத்தாள்கள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது.
- தேர்வு எழுதி முடித்த பிறகு மாணாக்கர்கள் விடைத்தாளின் அனைத்து பக்கங்களிலும், பக்கங்கள் வரிசைப்படி இருப்பதை உறுதிப்படுத்திக்கொண்டு நூலினால் கட்ட வேண்டும்.
- மாணாக்கர்கள் அந்தந்த கல்லூரியிலோ அல்லது தங்கள் இருப்பிடத்திலோ தேர்வு எழுதி விடைத்தாளை அன்றைய தினமே கல்லூரி முதல்வர் வழிகாட்டுதலின் அடிப்படையில் அவரவர் பயிலும் கல்லூரியில் ஒப்படைக்க வேண்டும். அவ்வாறு ஒப்படைக்க இயலாத மாணாக்கர்கள் அன்றைய தேர்வு முடிந்தவுடன் உடனடியாக அவரவர் கல்லூரி முதல்வருக்கு தபால் வழி அனுப்பி வைத்திடல் வேண்டும். மாணாக்கர்கள் இதில் ஏதேனும் ஒருமுறையை மட்டும் பின்பற்ற வேண்டும்.
- மாற்றுத்திறனாளி மாணாக்கர்களுக்கு தேர்வு எழுத 1 மணி நேரம் கூடுதலாக ஒதுக்கப்படும்.
- தேர்வுகள் தொடர்பான எத்தகைய முறைகேடுகளிலும் மாணாக்கர்கள் ஈடுபட வேண்டாம் என அறிவுறுத்தப்படுகிறார்கள். பின்னர் முறைகேட்டில் ஈடுபட்டதாக தெரியப்பட்டால் மாணாக்கர்கள் பல்கலைக்கழக தற்போதைய விதிமுறைகளின் படி உரிய நடவடிக்கைக்கு உள்ளாவார்கள்.

தேர்வு நெறியாளர்(பொ.)